www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பத்தாம் வகுப்பு - தமிழ் - முக்கியமான வினாக்கள்

### குறுவினா

1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
2. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்" – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.
3. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
4. வசனகவிதை– குறிப்பு வரைக.
5. மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
6. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
7. கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடி உண்டாயினும் இல் - இக்குறளில் வரும் அளபெடைகளைஎடுத்து எழுதுக.
8. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினைஎழுதுக.
9. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
10. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
11. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
12. காட்டில் விளைந்தவரகில் சமைத்தஉணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.
13. தஞ்சம் எளியர் பகைக்கு – இவ்வடிக்குரிய அசைகளையும் வாய்பாடுகளையும் எழுதுக.
14. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?
15. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
16. வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவரின் தன்மானத்தை எள்ளிநகையாடுவது குறித்துக்குறளின் கருத்து என்ன?
17. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.
18. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.
19. குறிப்பு வரைக - அவையம்.
20. தீவக அணியின் வகைகள் யாவை?
21. அன்பும் அறனும் உடைத்தாயின்இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?

### சிறுவினா

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
2. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.
3. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
4. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.
5. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.
6. வள்ளுவம், சிறந்தஅமைச்சருக்குக்கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள்வழி விளக்குக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

7. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

8. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

9. வள்ளுவம், சிறந்த அமைச்சருக்குக்கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக்குறள் வழி விளக்குக.

10. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்றநினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.

11. சங்க இலக்கியங்கள்காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சிலஎடுத்துக்காட்டுகள் தருக.

12. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

## நெடுவினா

1. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ்மன்றத்தில் பேசுவதற்கானஉரைக் குறிப்புகளைஎழுதுக.

2. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ்வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

3. புயலிலேஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச்சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

4. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலைஅழகுற விவரித்து எழுதுக.

5. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்று எழுதுக.

6. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

7. நெகிழிப் பைகளின் தீமையைக்கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரைஒன்றினைஎழுதுக.

8. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளைஇக்காலவணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

9. நிகழ்கலை வடிவங்கள் - அவைநிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழைமையும் -இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் – அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

10. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில்இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

11. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

12. 'அழகிரிசாமியின்' ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

## கலைச்சொல் அறிவோம்

Vowel - உயிரெழுத்து Consonant – மெய்யெழுத்து Homograph – ஒப்பெழுத்து
Monolingual – ஒரு மொழி Conversation –உரையாடல் Discussion – கலந்துரையாடல்
Storm – புயல் Land Breeze – நிலக்காற்று Tornado – சூறாவளி Sea Breeze –கடற்காற்று
Tempest – பெருங்காற்று Whirlwind – சுழல்காற்று
செவ்விலக்கியம் - Classical literature காப்பியஇலக்கியம் - Epic literature பக்தி இலக்கியம் - Devotional literature பண்டையஇலக்கியம் – Ancient literature
வட்டாரஇலக்கியம் - Regional literature நாட்டுப்புறஇலக்கியம் - Folk literature
நவீன இலக்கியம் - Modern literature Nanotechnology – மீநுண்தொழில்நுட்பம்

அறம் பயிற்சி மையம், மடத்துக்குளம். தொகுப்பு: ந. சண்முகசுந்தரம் (அறம் ஆசிரியர்)
அ.எண்: 96598 38789

2023

Space Technology – விண்வெளித் தொழில்நுட்பம்
Biotechnology – உயிரித் தொழில்நுட்பம் Cosmic rays - விண்வெளிக்கதிர்கள்
Ultraviolet rays – புறஊதாக்கதிர்கள் Infrared rays – அகச்சிவப்புக்கதிர்கள் Emblem - சின்னம் Intellectual – அறிவாளர் Consulate – துணைத்தூதரகம் Patent – காப்புரிமை
Document - ஆவணம் Guild - வணிகக் குழு Irrigation - பாசனம் Territory – நிலப்பகுதி
Thesis - ஆய்வேடு Symbolism – குறியீட்டியல் முச்சி - தலையுச்சிக் கொண்டை
Aesthetics - அழகியல், முருகியல் Terminology - கலைச்சொல் Artifacts - கலைப் படைப்புகள் Myth – தொன்மம் Belief - நம்பிக்கை Philosopher - மெய்யியலாளர்
Renaissance - மறுமலர்ச்சி Revivalism - மீட்டுருவாக்கம் Humanism - மனிதநேயம்
Cultural Boundaries - பண்பாட்டு எல்லை Cabinet – அமைச்சரவை
Cultural values - பண்பாட்டு விழுமியங்கள்

## இலக்கணக்குறிப்பு

மூதூர் – பண்புத்தொகை உறுதுயர் – வினைத்தொகை கைதொழுது - மூன்றாம் வேற்றுமைத் தொகை

தடக்கை - உரிச்சொல் தொடர் நன்மொழி – பண்புத்தொகை ஊழ்ஊழ் – அடுக்குத் தொடர் வளர்வானம் – வினைத்தொகை செந்தீ – பண்புத்தொகை வாரா(ஒன்றன்) – ஈறுகெட்டஎதிர்மறைப் பெயரெச்சம் கேள்வியினான்– வினையாலணையும் பெயர்; காடனுக்கும் கபிலனுக்கும் – எண்ணும்மை குண்டலமும் குழைகாதும் – எண்ணும்மை ஆடுக– வியங்கோள் வினைமுற்று பயில்தொழில் – வினைத்தொகை;
மெய்முறை - வேற்று மைத்தொகை; கைமுறை - மூன்றாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன்தொக்கதொகை அசைஇ, கெழீஇ - சொல்லிசை அளபெடைகள்

## சொல்லும் பொருளும்

நேமி – சக்கரம்; சுவல் – தோள்; அசைஇ – இளைப்பாறி; வயிரியம் – கூத்தர்; பொம்மல் – சோறு; மாயம் – விளையாட்டு; விசும்பு – வானம்; தண்பெயல் – குளிர்ந்தமழை; தமர் – உறவினர்; தார் – மாலை; அசும்பு – நிலம்; கொம்பு – கிளை; உவமணி – மணமலர்;

## பகுபதஉறுப்பிலக்கணம்

1. தணிந்தது 2. பதிந்து 3. மயங்கிய 4. அறியேன் 5.பொறித்த 6. உரைத்த 7. பொழிந்த

## படிவம்

1. நூலக உறுப்பினர் படிவம்
2. பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்
3. மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்
4. தமிழ்நாடு விளையாட்டு மேம்பட்டு ஆணையத்தின் உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பப் படிவம்

## பாநயம் பாராட்டுக.

**தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே!**

**தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே!**

**ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே!**

**உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே!**

**வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே!**

**மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே!**

**தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே!**

**தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே!**

- **க. நமச்சிவாயர்.**